செ. கு. எண்:88

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 6.4.2013

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், ஆட்டந்தாங்கல் பகுதியைச் சேர்ந்த அரசுப் போக்குவரத்துக் கழக நடத்துநர் திரு. செல்வம் மற்றும் அவரது மகன் செல்வன் ஜீவரத்தினம் ஆகிய இருவரும் 31.3.2013 அன்று புழல் ஏரியில் குளிக்கும் போது நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த செல்வம் மற்றும் ஜீவரத்தினம் ஆகியோரை இழந்து வாடும் அவர்களது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த செல்வம் மற்றும் ஜீவரத்தினம் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**